**தலைப்பு 130 – உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியில் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 20 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 11,112.24 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 9,517.43 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1,594.81 அதாவது 14.4 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவுகள் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 1,583.94 | 1,273.87 | 310.07 | 19.6 |
| மூலதனம் | 9,528.30 | 8,243.56 | 1,284.74 | 13.5 |
| மொத்தம் | 11,112.24 | 9,517.43 | 1,594.81 | 14.4 |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | இழிவு எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 13001 | 8.00 | 6.47 | 3.90 | 4.74 | 35.00 | 24.99 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம், உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்கு உட்பட்டு தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3.1 ஆம் பந்தியிலிருந்து 3.10 ஆம் பந்தி வரையான பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ளது.

# 3. தலைப்பு 130 – உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு

## 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | கிடைக்கப் பெறும் காசோலை மற்றும் காசுக் கட்டளை போன்றவற்றிற்கான பதிவேடுகள் | நிதிப்பிரமாணம் 451 |
| (ii) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.11.2 வழிகாட்டல் |
| (iii) | குழுக்களின் கூட்ட அறிக்கைகள் | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.11.3(அ) வழிகாட்டல் |
| (iv) | கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.2.1 வழிகாட்டல் |

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### (அ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

34 செலவின விடயங்களுக்காக ரூபா 1,482,023,498 மிகை ஏற்பாடுகள் செய்யபட்டதன் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர்

சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 6 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) ஏனைய அமைச்சுக்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பயன்பாடு**

---

நுழைவு வீதி அபிவிருத்தி மற்றும் கிராமிய பாலங்களை நவீனமயப்படுத்துவதற்கும் புதிதாக நிர்மாணிப்பதற்காகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 4,395 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது, அவ் ஏற்பாடுகளில் ரூபா 1,903 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி பிரிவுகள் நிர்மாணம் உட்பட பல்நோக்கு செயற்பாடுகளுக்காக கல்வனைஸ் குழாய் கொள்வனவு செய்ய வேண்டுமென உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரினால் 2014 ஒக்தோபர் 09, 15 மற்றும் 20 ஆம் திகதிகளில் அறிவிக்கப்பட்டதன் பேரில் ரூபா 44,347,822 இற்கு 40,056 கல்வனைஸ் குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அரசின் கொள்வனவு வழிகாட்டல் சேவையின் 1.2.1 வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் கொள்வனவு செயற்பாடு செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் மேற்குறித்த கொள்வனவு திறந்த விலை கோரல் நடைமுறையைப் பின்பற்றாமல் 2014 ஒக்தோபர் 28 ஆந் திகதி முதல் நவம்பர் 14 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ரூபா 44,347,822 தொகையான கொள்வனவு 06 சந்தர்ப்பங்களில் பகுதிகளாக்கப்பட்டு சந்தை விலை ஒப்பிட்டு முறைமை மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) கல்வனைஸ் குழாய்களின் மாதிரிகளைத் தீர்மானிக்கும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதோ அல்லது அது தொடர்பான அறிவினைக் கொண்ட உத்தியோகத்தரொருவரிடமிருந்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளாமல் கொடிக் கம்பங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தக்கூடிய கல்வனைஸ் குழாய்களுக்காக கூறுவிலை கோரப்பட்டிருந்தன.

(iii) உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து கொடிக் கம்பங்கள் தேவைப்பாடு தொடர்பாக எழுத்து மூல வேண்டுகோள் இல்லாமல் இருந்ததுடன், 9

மாவட்டங்களின் 77 உள்ளூராட்சி மன்றங்களுக்கு ரூபா 44,347,822 இற்கு 40,056 கொடிக்கம்பங்கள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறு வழங்கப்பட்ட கொடிக் கம்பங்கள் உரிய உள்ளூராட்சி மன்றங்களினால் எவ்வித ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தாமல் அந்நிறுவனங்களில் குவித்து வைக்கப்பட்டிருந்தமை தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து 2015 ஜனவரி 28 ஆந் திகதி கடிதத்தின் மூலம் கோரப்பட்ட தகவல்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

13001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,244,434 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகளில் 06 மாதங்கள் தொடக்கம் 05 வருடங்கள் வரையான காலமாக இருந்து வந்த போதிலும் அந்நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 இணக்கமின்மை

#### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

எட்டு பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்ட ஒன்று ரூபா 30,210 வீதம் ரூபா 1,419,870 பெறுமதியான 47 நடமாடும் கூடாரங்களின் எண்ணிக்கையை நிதிப் பிரமாணம் 751 இன் பிரகாரம் அமைச்சின் இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட 11 செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 76,257 மில்லியனாக இருந்ததுடன் அச்செயற்திட்டங்களுக்காக ரூபா 3,326 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2015 யூன் 30 ஆந் திகதி வரை கணக்காய்வு செய்யப்பட்ட 06 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம்

வனாத்தமுல்ல பிரதேசத்தின் நிர்மாணத்திற்கும் மேம்படுத்தலுக்கும் 2014 ஜனவரி 13 ஆந் திகதி ரூபா 290 மில்லியனுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2015 ஜனவரி 27 இல் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அத்திகதியை மிகைத்து 2015 பெப்ரவரி 19 ஆந் திகதி அளவிலும் அதன் பௌதீக செயன்முன்னேற்றம் 13 சதவீதமாக இருந்தது.

**(ஆ) மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம்**

---

இது தொடர்பாக அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தினால் முறையான சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்படாமல் ரூபா 29,827,931 தொகை செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த காபட் இடும் இயந்திரம் (Asphalt Premix Paving Machine) மத்திய மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2013 திசெம்பர் மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்தது. அம் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் இயந்திரத்தை வழங்கிய திகதியிலிருந்து கணக்காய்வு திகதியான 2015 மே 21 ஆந் திகதி வரையிலும் அவ்வியந்திரம் 5 நாட்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ii) செயற்திட்டத்தினால் சப்ரகமுவ மாகாண சபையின் அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபைக்கு வழங்கிய ரூபா 24,306,303 பெறுமதியான 08 டிபர் வண்டிகள் மற்றும் ரூபா 9,950,850 பெறுமதியான 08 Double Drum Steel Wheel Roller அலுவகங்களில் விளைவற்ற நிலைமையில் காணப்பட்டன.

(iii) செயற்திட்டத்தினால் சப்ரகமுவ மாகாண சபையின் மாகாண பொறியியல் சேவைத் திணைக்களத்திற்கு ரூபா 2,940,499 செலவு செய்து வழங்கப்பட்ட 15 இயந்திரங்கள் (Plate Compactors) ரூபா 703,999 பெறுமதியான 16 புல் வெட்டும் இயந்திரங்கள் என்பன கணக்காய்வு திகதியான 2015 மே 12 ஆந் திகதி வரை வரை எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படாமல் இருந்தன.

(iv) 2015 மார்ச் 15 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த SG2KG3 வீதிப் பொதியின் செயன்முன்னேற்றம் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் 73 சதவீதமும் SG3RPI வீதிப் பொதியின்

செயன்முன்னேற்றம் 46 சதவீதமான மிகவும் பலவீனமான நிலைமையில் காணப்பட்டன.

**(இ) வீதித்துறை உதவி செயற்திட்டம்**

---------------------------------------------------------

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) செயற்திட்டங்கள் மற்றும் அமைச்சு பதவியணியினர் என முறையே மூன்று உத்தியோகத்தர்கள் மற்றும் 39 பேரை உள்ளடக்கி 42 உத்தியோகத்தர்கள் சமூகமளித்த மத்தல சுற்றுலாவிற்கு கட்டுநாயக்கவிலிருந்து மத்தல வரை விமான டிக்கட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கும் உணவு பானங்களுக்குமென ரூபா 479,250 செயற்திட்ட நிதியிலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ii) கிராமிய வீதி நிர்மாண கூறின் செயற்திட்ட பணிகள் 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி முடிவடைந்திருந்த போதிலும் அச் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்குரிய அறிக்கை 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் வரிசை அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) மாகாண வீதி செயற்திட்டம் (ஊவா)**

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 செப்தம்பர் 01 ஆந் திகதி Sec/2013/07 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்கள சுற்றறிக்கையின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக 09 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 421,704 தொகை உழைக்கும் போது செலுத்தும் வரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஊவா மாகாணத்தின் செயற்திட்டங்களை அமுல்படுத்தும் பிரிவினால் செயற்திட்ட உத்தியோகத்திர்களின் பயன்பாட்டிற்காக சுற்றுலா விடுதியொன்றை, UVA செயற்திட்டத்தின் ஒப்பந்தக்காரரிடமிருந்து பெற்றுக்கொண்டு அவ்வீட்டிற்கான வாடகையை அளவீட்டுப் பத்திரங்களுக்கு உட்படுத்தி 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,635,891 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) கேள்வியை சரியாக மதிப்பீடு செய்வதன் மூலம் சரியான ஒப்பந்தக்காரரொருவரை தெரிவு செய்யாமை மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளை மீறிய UVA 02 செயற்திட்டத்தின் ஒப்பந்தக்காரரின் உடன்படிக்கை இரத்துச் செய்யப்படாமையால் ரூபா 729 மில்லியனை நட்ட ஈடு கோரி ஒப்பந்தக்காரரினால் நட்டஈட்டு வழக்கொன்று 2014 ஆகஸ்ட் 05 ஆந் திகதி தொடரப்பட்டிருந்தது. அதன் மூலம் அரசிற்கு ஏற்படக்கூடிய

நிதிசார் நட்டத்தை நிறுத்திக்கொள்வதற்கு முகாமையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக 2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) கொள்வனவு கால அட்டவணையின் பிரகாரம் செயற்திட்டங்களை செயற்படுத்தமை, செயற்திட்ட மேற்பார்வை, மதியுரை மற்றும் செயற்திட்ட பதவியணியினர் நியமிக்கப்படாமை மற்றும் ஊவா மாகாண சபை மற்றும் நிதி அமைச்சு என்பவற்றிற்கிடையே உடன்படிக்கை கைச்சாத்திடாமை போன்ற காரணங்களினால் கேள்வி கிடைக்கப்பெற்றதன் பின்னர் கேள்வி செல்லுப்படியாகும் காலஎல்லைக்குள் மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படாமையால் 05 கேள்விதாரர்களுக்கு ஒப்பந்தப் பெறுமதியின் நிலையான பகுதி அடிப்படையில் 06 சதவீதத்திற்கு சமமான ரூபா 18,626,657 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரண்டு கொள்வனவு மதியுரையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கையிலும் மேற்படி சிக்கல் தோன்றியிருந்தது.

(v) செயற்திட்டத்தினால் மதியுரையாளர்களையும் செயற்திட்ட பதவியணிக்கான 25 வாகனங்களின் சேவையையும் ஒப்பந்தக்காரர்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 149.8 மில்லியன் வாடகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாகனங்களை ஒப்பந்தக்காரர்களிடம் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக 25 வாகனங்கள் ரூபா 110.6 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டால் அண்ணளவாக அரசிற்கு ரூபா 20.5 மில்லியன் நிதி நலனொன்றும் ரூபா 110.6 மில்லியன் பெறுமதியான 25 வாகனங்களின் உரித்தினையும் கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(vi) பதுளை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட UVA 02 கல உட கந்தகெட்டிய வீதியின் 4+730 இடத்தில் மதகொன்று 900mm அகலத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 600mm அகலத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பழைய மதகு அகற்றப்பட்டிருக்கவில்லை. இந்த இடத்தில் நீர்ப்பாசன முறைமையில் வீதி நிர்மாணிக்கப்பட்ட காரணத்தினால் சேதம் ஏற்பட்டிருந்த போதிலும் அதனை உரிய நிலைமைக்கு கொண்டுவராததன் காரணமாக 18 விவசாயிகளுக்குரிய 36 ஏக்கர் அளவிலான விவசாயத்திற்கான நீரைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது.

**(உ) மாகாண வீதி செயற்திட்டம் (செயற்திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவு)**

---

செயற்திட்ட செலவில் வெளிநாட்டு கல்வி அல்லது பயிற்சிக்காக 04 சந்தர்ப்பங்களில் 09 உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்றிருந்தனர். 2010 ஒக்டோபர் 11 ஆந் திகதி 2010/01 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைய படிகளாக நாளொன்றுக்கு 30 ஐக்கிய அமெரிக்க டொலர் செலுத்தப்பட வேண்டிய போதிலும், செயற்திட்டத்தினால் அந்த உத்தியோகத்தர்களுக்கு அமையப் படிகளாக நாளொன்றுக்கு 50 ஐக்கிய அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டமையால் ரூபா 140,405 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்தை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) வடக்கு வீதி தொடர்புபடுத்தல் செயற்திட்டம் (மேலதிக நிதிஏற்பாடு)**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட 05 வீதி பொதிகளுக்குரிய கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 90,142,929 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட தொகை மீளாய்வாண்டின் இறுதியில் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை அரசினால் கைச்சாத்திடப்பட்ட 2890 ஆம் இலக்க உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்ட நிதியத்திலிருந்து வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தினால் பொதி 01 ஒப்பந்தக்காரர் ஊடாக ஒப்பந்த செலவினத்திற்கு ரூபா 17,000,000 தொகை உள்ளடக்கப்பட்டு 02 அரைச் சொகுசு கெப் வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(iii) செயற்திட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி இரண்டு வாகனங்களின் பராமரிப்புச் செலவினமாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,136,000 செலுத்தப்பட்டிருந்தது. அப்பராமரிப்பு செலவினங்களுக்குரிய பட்டியல்கள், நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் எதுவும் செயற்திட்ட அலுவலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அச் செலவினத்தை திருப்திகரமாக கணக்காய்வின் போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(iv) செயற்திட்ட அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட 10 உத்தியோகத்தர்கள் அவர்களின் ஆரம்ப சம்பளத்திற்கு செலுத்த வேண்டிய 5 வித விசேட படிகள், 15 சதவீத படிகள் மற்றும் செயற்திட்ட அலுவலகத்தில் சேவை புரிவதற்காக செலுத்தப்படும் 50 சதவீத படிகளையும் அடிப்படையாகக் கொண்டு செயற்திட்டத்திலிருந்து அந்த உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் கொடுப்பனவு யெ்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 158,940 கூட்டுத்தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(v) செயற்திட்ட அலுவலகத்தின் கடமைகளை மேவுகை செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்த வட மத்திய மாகாண அரச சேவை உத்தியோகத்தருக்கு தமது நிரந்தர பதவிக்குரிய சம்பளம் கொடுப்பனவு செய்யும் போது 5 சதவீத விசேட படிகள் மற்றும் 15 சதவீத படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அவ்வாறு செலுத்தப்பட்டிருக்கையில் செயற்திட்டத்தினாலும் அலுவலக கடமை மேவுகை செய்தமைக்காக செலுத்தப்படுகின்ற படிகளுக்காகவும் மேற்குறித்த 5 சதவீத விசேட படிகள் மற்றும் 15 சதவீத படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செயற்திட்ட நிதியிலிருந்தும் அப்படிகளாக ரூபா 220,368 கூட்டுத் தொகை கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

(vi) நீர்பாசனத் திணைக்களத்தின் ஆலோசனை மற்றும் அனுமதி பெற்றுக் கொள்ளப்படாமல் அநுராதபுர பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட குளக்கட்டு ஊடாக அமைந்துள்ள வீதிகளில் வீதியின் மேற்பகுதியை முறையாக காபட் இடுவதற்காக குளக்கட்டினை வெட்டுதல், மண் நிரப்புதல் மற்றும் பரவுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் குளக்கட்டின் ஊடாக அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த வீதிகளில் காபட் இடப்பட்ட வீதியின் மேற்பரப்பு வெடித்திருந்தது. (உதாரணமாக NCANC -128 கிரிகொல்லாவ - ஹிரலுகம வீதியின் 3 + 750 km 16 + 540 km முதலாவது மற்றும் இரண்டாவது குளங்களை அண்மித்த பகுதிகளில் வெடித்திருந்தன)

## 3.6 செயலாற்றல்

---------------------

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

(அ) 2014 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு நிதிய செயற்திட்டங்கள் தொடர்பான தரவுகளில் நிதிசார் இலக்குகள் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், பௌதீக இலக்குகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிறுவகத்தின் திட்டமிடல் நடவடிக்கைகள் வெற்றியளித்திருக்கவில்லை.

(ஆ) செயன்முன்னேற்ற அறிக்கையிலும் நிதிசார் இலக்குகள் மற்றும் நிதி செயல் முன்னேற்றம் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனால் அமைச்சினால் நிறைவேற்றபட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக பௌதீக செயல் முன்னேற்றம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அத்தகவல்கள் உரிய கோவைகளைப் பரீட்சித்த போதும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

### 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையிலிருந்து விலகுதல்**

கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.4 வழிகாட்டலுக்கு முரணாக உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சினால் ரூபா 24.77 மில்லியன் கிரயத்திலான 820 நடமாடும் கூடாரங்கள் சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பயன்படுத்தப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

### 3.8 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

அம்பாந்தேட்டை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு 120 கெனபி கூடாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்ட ரூபா 864,000 பெறுமதியான 32 கெனபி கூடாரங்கள் குறித்த 06 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

### 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

அம்பாறை மாவட்டத்தின் வறிய மக்களின் வாழ்க்கை நிலைமையை உயர்த்துவதற்கு சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு தேர்தல்கள் காலங்களில் 900 துவிச்சக்கர வண்டிகள் ரூபா 13,305,600 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு 2015 சனவரி 05 ஆந் திகதி அக்கரைப்பற்று பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தனியார் நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 13,305,600 செலவு செய்து 900 துவிச்சக்கர வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அக்கொள்வனவின்

போது ஆகக் குறைந்த கூறுவிலை மற்றும் அதற்கு பின்னைய குறைந்த கூறுவிலை ஆகிய இரண்டு கூறுவிலைகளும் நிராகரிப்பட்டமையால் முறையே 939,600 மற்றும் ரூபா 759,600 ஆன நிதிசார் நட்டம் அரசிற்கு ஏற்பட்டிருந்தது.

(ii) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி எழுதப்பட்ட காசோலைகளில் 900 துவிச்சக்கர வண்டிகளுக்கான ரூபா 13,305,600 இற்கான காசோலை மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், பௌதீக பரிசோதனையின் போது 2014 திசெம்பர் 31 ஆந் திகதி எழுதப்பட்ட ரூபா 16,262,375 பெறுமதியான 04 காசோலைகள் 2015 சனவரி 13 ஆந் திகதி வரையிலும் கணக்குப் பிரிவில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் 2015 சனவரி 16 ஆந் திகதி அளவில் அவை இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

## 3.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 39 | 26 | 14 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 | |
| (iii) | இரண்டாம் நிலை | 153 | 120 | 33 | |
| (iv) | ஆரம்ப நிலை | 55 | 42 | 13 | 01 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படையில்) | - | 01 | - | - |
| | மொத்தம் | 250 | 190 | 62 | 02 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 62 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், இரண்டு மிகை ஊழியர்களுக்காக முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.